# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

## சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306ஏ- தேசிய அபிவிருத்தி மன்ற நம்பிக்கை நிதியம் (கூட்டிணைத்தல்) (திருத்தம்)

***1986 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306ஏ- தேசிய அபிவிருத்தி மன்ற நம்பிக்கை நிதியம் (கூட்டிணைத்தல்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

*காலி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ கயந்த கருணாதிலக்க அவர்களால் 2021, யூன் மாதம் 23 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2021, மே மாதம் 18 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

[ *53 ஆம் சட்டமூலம்* ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306ஏ - தேசிய அபிவிருத்தி மன்ற நம்பிக்கை நிதியம் (கூட்டிணைத்தல்) (திருத்தம்)

### 1986 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306ஏ - தேசிய அபிவிருத்தி மன்ற நம்பிக்கை நிதியம் (கூட்டிணைத்தல்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

*முன்னுரை*

"1986 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306ஏ - தேசிய அபிவிருத்தி மன்ற நம்பிக்கை நிதியச் சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்ட சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306ஏ - தேசிய அபிவிருத்தி மன்ற நம்பிக்கை நிதியத்தின் இணை உறுப்பினர்கள் சொல்லப்பட்ட நிறுவகத்தின் பெயரை திருத்துவதற்கு தீர்மானமொன்றை நிறைவேற்றியிருப்பதாதலாலும்:

அத்துடன், சொல்லப்பட்ட நிதியமானது சொல்லப்பட்ட தீர்மானத்திற்கு பயன்கொடுக்கின்ற நோக்கத்திற்கென அத்தகைய நிதியத்தின் பெயரை விண்ணப்பித்துள்ளதாதலாலும் அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் உசிதமாக இருக்குமாதலாலும்:

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப்பெயர்*

**1.** இச்சட்டம், 2021 ஆம் ஆண்டின்   ஆம் இலக்க, சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306ஏ - தேசிய அபிவிருத்தி மன்ற நம்பிக்கை நிதியம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*1986 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்திற்கான பொதுவான திருத்தம்*

**2.** சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306ஏ - தேசிய அபிவிருத்தி மன்ற நம்பிக்கை நிதியம் (கூட்டிணைத்தல்) சட்டத்தில் (அப்பெயரினாலும்சரி அல்லது "சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306ஏ - தேசிய அபிவிருத்தி மன்ற நம்பிக்கை நிதியம்" என்னும் பெயரினாலும்சரி அல்லது நம்பிக்கை நிதியம் என்னும் சுருக்கத்தினாலும்சரி) அச்சட்டத்தின்கீழ், வழங்கப்பட்ட ஏதேனும் அறிவித்தலில் அல்லது வேறு ஆவணத்தில் "சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306ஏ - தேசிய அபிவிருத்தி மன்ற நம்பிக்கை நிதியம்" எனக் குறிப்பிடப்படும் சந்தர்ப்பம் ஒவ்வொன்றிலும் சந்தர்ப்பம் வேறுவகையாக தேவைப்படுத்தினாலன்றி "சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306ஏ - தேசிய அபிவிருத்தி மன்ற நம்பிக்கை நிதியம்" என்னும் சொல்லமைப்பிற்குப் பதிலாக "சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306ஏ 1 மற்றும் மாவட்டம் 306ஏ 2 - தேசிய அபிவிருத்தி மன்ற நம்பிக்கை நிதியம்" என்னும் சொல்லமைப்பு இடப்படுதல் வேண்டும்.

ஒப்பந்தங்கள் முதலியவற்றிற் கான பேணல்கள்

**3.** இச்சட்டம் தொடங்குவதற்கு முன்னர் “சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306ஏ - தேசிய அபிவிருத்தி மன்ற நம்பிக்கை நிதியத்தால்” அல்லது அதற்குச் சாதகமாக ஆக்கப்பட்ட, வழங்கப்பட்ட அல்லது நிறைவேற்றப்பட்ட கைச்சாத்திடப்பட்ட எத்தகையதுமான ஒவ்வொரு ஒப்பந்தங்களும், உடன்படிக்கைகளும், சான்றிதழ்களும் அல்லது வேறு சாசனங்களும் அல்லது ஆவணங்களும் இச்சட்டம் தொடங்கும் தேதியன்று அல்லது அதன்பின்னர் “சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306ஏ 1 மற்றும் மாவட்டம் 306ஏ 2 - தேசிய அபிவிருத்தி மன்ற நம்பிக்கை நிதியத்தால்” அல்லது அதற்குச் சாதகமாக ஆக்கப்படவுள்ளதாக, வழங்கப்படவுள்ளதாக, நிறைவேற்றப்படவுள்ளதாக அல்லது ஆக்கப்பட்டுள்ளதாக வழங்கப்பட்டுள்ளதாக அல்லது நிறைவேற்றப்பட்டுள்ளதாக கைச்சாத்திடப்பட்டுள்ளதாக கருதப்படுதல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**4.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.